**செய்தி வெளியீடு எண்:317** **நாள்: 01.07.2016**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க** மாநில நலவாழ்வு குழுமம் (National Rural Health Mission) மற்றும் தமிழ்நாடு சுகாதார திட்டம் (Tamil Nadu Health System Project) குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று 01.07.2016 சென்னை தேனாம்பேட்டை டி.எம்.எஸ் வளாக கூட்டரங்கில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மகப்பேறு மற்றும் இளம் சிசு மரண விகிதங்களை குறைத்தல், பெண்களுக்கு ஏற்படும் இரத்த சோகை நோயை கட்டுப்படுத்துதல், தொற்றும் மற்றும் தொற்றா நோய்களை கட்டுப்படுத்துதல், வளரிளம் பருவத்தினருக்கான நலத் திட்டங்கள், மகப்பேறு நலத் திட்டங்கள், கருவுற்ற மற்றும் மகப்பேறுற்ற தாய்மார்களுக்கு உணவு வழங்குதல் மற்றும் மாநில நகர நலவாழ்வு குழுமத்தின் (National Urban Health Mission) திட்டங்களான தரமான சுகாதார சேவை கிடைப்பதற்கான நிதி முறையாக செலவிடப்படுகிறதா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மக்களின் ஏகோபித்த வரவேற்பை பெற்று அனைத்து தரப்பு மக்களால் வெகுவாகப் பாராட்டப்படும் **முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் செயல்பாடுகள்** குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் கீழ் செயல்படும் 108 அவசரகால ஆம்புலன்ஸ் சேவையின் செயல்பாடுகள், இலவச அமரர் ஊர்தி சேவையின் செயல்பாடுகள் மற்றும் கூடுதல் ஊர்திகளுடன் சேவையினை மேம்படுத்துதல் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வு கூட்டத்தில் பேசிய மாண்புமிகு அமைச்சர், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** உத்தரவின்பேரில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும் பயனாளிகளுக்கு முழுமையாகவும், விரைவாகவும் சென்றடையவும், இத்திட்டங்களை பயன்படுத்தி வளர்ந்த நாடுகளுக்கு இணையான, தரமான சேவைகள் பொதுமக்களுக்கு எளிதில் கிடைப்பதை உறுதி செய்யும் அனைத்து முயற்சிகளையும் மேலும் உத்வேகத்துடனும் அர்பணிப்பு உணர்வுடனுடம் செயல்படுத்த அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மாநில நலவாழ்வு குழும இயக்குநர் டாக்டர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., துறை இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**